பாடம் - 16: தாவீது சவுலின் உயிரைக் காப்பாற்றுகிறான்

வேத வாசிப்பு: 1 சாமுவேல் 26:1-25

1. நான் யார்?

தேர்ந்தெடுக்க: தாவீது, அபிசாய், சவுல்

1. நான் புண்படுத்தாமல் மன்னிக்கத் தீர்மானித்தேன். நான் யார்? _____
2. நான் தாவீதைத் துரத்திய ராஜா. நான் யார்? _____
3. நான் பழிவாங்க விரும்பிய தாவீதின் நண்பன். நான் யார்? _____

2. அன்பா? கொடூரமா?

அன்பு என்றால் அ, கொடூரம் என்றால் கொ என்று எழுதுக:

1. எனக்குக் கொடுமை செய்தவரை மன்னித்தல். (___)
2. கொடுமைக்குக் கொடுமையால் பதில் செய்தல். (___)
3. என்னை வருத்தப்படுத்துகிறவருக்காக ஜெபித்தல். (___)

3. சரியா? தவறா?

சரி என்றால் ச, தவறு என்றால் த என்று எழுதுக:

1. தாவீது சவுலின் ஈட்டியையும் தண்ணீர்ச் செம்பையும் எடுத்தான். (___)
2. தாவீது பழிவாங்க விரும்பினான். (___)
3. தாவீதைத் துரத்துவதை நிறுத்துவதாக சவுல் வாக்குக் கொடுத்தான். (___)

4. கலந்துரையாடல் கேள்விகள்

1. தாவீது சவுலுக்கு தன் அன்பை எப்படிக் காட்டினான்?

2. தாவீது ஏன் பழிவாங்கவில்லை?

3. கொடூரமாக நடக்கிறவர்களை நாம் எப்படி நடத்த வேண்டும்?

5. மனப்பாட வசனம்:

சங்கீதம் 1:3 — "அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் பருவகாலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராமலிருக்கும் மரத்தைப்போலிருப்பான்; அவன் எது செய்தாலும் அது கைகூடிவரும்."

ரோமர் 12:21 — "தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு."

6. படத்திற்கு வண்ணம் தீட்டுக:

